# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2021 யூலை

## (204) வணிக முகாமைத்துவம்

இவ்வினாத்தாள் **A, B, C** என 3 பகுதிகளையும் 07 வினாக்களையும் கொண்டுள்ளது.

### பகுதி A

**வினா இல. 01**

இவ்வினா 25 புள்ளிகளுக்கான பதினைந்து (15) OTQs ஐக் கொண்டுள்ளது.

இல. **1.1** தொடக்கம் **1.5** வரையுள்ள வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவுசெய்து, தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை விடைப்புத்தகத்தில் எழுதுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர். பாடம் தொடர்பில் குறைந்தளவு அறிவைக் கொண்டிருந்த காரணத்தால் சில பரீட்சார்த்திகள் சரியான விடைகளைத் தெரிவு செய்யத் தவறியிருந்தனர். இதனால் அவர்கள் இந்த ஐந்து வினாக்களுக்கும் குறைந்தளவு புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

இல. **1.6** தொடக்கம் **1.10** வரையான வினாக்களைப் பொறுத்தவரையில், அங்கு அடைப்புக்குறிக்குள் தரப்பட்ட இரண்டு விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வினா **1.7** மற்றும் **1.10** இற்கு சரியான விடையை அளிக்கத் தவறியிருந்தனர். இந்த இரண்டு வினாக்களுக்காகவும் முறையே ''குறைநிலைப் பொருளாதாரம்'' மற்றும் ''தந்திரோபாய மாற்றம்'' என்ற தவறான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கு குறுகிய விடைகளை எழுதுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர்.

**1.11** பரீட்சார்த்திகள் மெக்ஸ் வேபர் கூற்றுக்கிணங்க, அதிகாரவியலின் பண்புகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டனர். பெரும்பாலானவர்கள் இந்த வினாவுக்கு மிகவும் மோசமாக விடை அளித்திருந்தனர். ஏஏரி பாடப்புத்தகத்தில் பண்புகள் மிக விபரமாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன.

**1.12** திட்டமிடல் கோட்பாடுகள் இரண்டை நிரற்படுத்துமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் கோட்பாடுகளுக்குப் பதிலாக திட்டமிடலின் அனுகூலங்களை நிரற்படுத்தி யிருந்ததைக் காணக்கூடியதாக இருந்ததுடன் வழங்கப்பட்ட விடைகள் மிக மோசமான மட்டத்திலும் காணப்பட்டன.

**1.13** இவ்வினாவில் இரண்டு தொடர்பாடல் தடைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்து இவ்வினாவுக்கான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

**1.14** இவ்வினா முகாமையாளருக்கும் தலைவருக்குமிடையிலான இரு வேறுபாடுகளை நிரற்படுத்து மாறு கேட்டிருந்தது. வழங்கப்பட்ட விடைகள் மிகத் திருப்திகரமானதாக அமைந்திருந்தன.

**1.15** இங்கு, மாற்ற முகாமைத்துவம் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விபரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளாது விடை அளித்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

## பகுதி B

இப்பகுதி ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்ட மொத்தமாக 50 புள்ளிகளுக்காக 05 வினாக்களை உள்ளடக்கியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகளின் இவ்வினாவுக்கான செயலாற்றுகை மட்டம் திருப்திகரமானதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு விடையெழுதாமல் விட்டிருந்ததுடன் சொற்பளவான பரீட்சார்த்திகள் சில வினாக்களுக்கு வருந்தத்தக்க விடைகளை எழுதியிருந்தனர்.

**வினா இல. 02**

இந்த வினா நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அதன் நோக்கங்களை இனங்காண்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இது 3 பகுதிகளைக் கொண்டிருந்தது.

**(a)** அதிகாரத்திற்கும் பொறுப்புக்குமிடையிலான இரண்டு வேறுபாடுகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித்திருந்த போதிலும், சிலர் வினா பற்றித் தெளிவின்றிக் காணப்பட்டனர். இதனால் பொறுப்பு மற்றும் அதிகாரம் ஆகியவற்றைத் தனித்தனியாக வரைவிலக்கணப்படுத்தியிருந்தனர். இதற்கு குறிப்பான விடை இருப்பதால் இது ஒரு இலகுவான வினாவாக இருந்தது. ஆனால் இதற்கு சில பரீட்சார்த்திகள் தேவையற்ற விபரமான விடைகளை எழுதியிருந்தனர்.

**(b)** இந்த வினாவின்படி, ஒழுங்கமைப்புச் செயன்முறையில் காணப்படும் பிரதான படிமுறைகளைக் குறிப்பிட வேண்டியிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடையை அளித்து, இதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். ஆனால் சில பரீட்சார்த்திகள் தவறாக முகாமைச் செயன்முறை பற்றி எழுதியிருந்தனர். சிலர் வினா பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ளத் தவறியிருந்ததுடன் தவறான விடைகளை அளித்திருந்தனர்.

**(c)** தீர்மானமெடுத்தல் முகாமையாளருக்கு ஏன் முக்கியமானது என்பதற்கான இரண்டு காரணங்களை பரீட்சார்த்திகள் விபரித்தல் வேண்டும். மொத்தத்தில், இந்த வினாவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய விடைகளை பரீட்சார்த்திகள் வழங்கியிருந்ததை அவதானிக்க முடிந்தது. வினா பற்றிய போதிய விளக்கத்தைக் கொண்டிராத பரீட்சார்த்திகளின் விடைகளும் காணப்பட்டன. கட்டாயம் இரண்டு காரணங்களை விபரிக்க வேண்டும் என்ற போதிலும் சில பரீட்சார்த்திகள் அனைத்தையும் ஒரே பந்தியின் கீழ் எழுதியிருந்தனர். சிலர் அத்தகைய காரணங்களை விபரிக்கத் தவறியிருந்தனர். இந்தக் காரணங்கள் சில பரீட்சார்த்திகள் முழுமையான புள்ளிகளையும் பெற்றுக் கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்பட்டது.**

**வினா இல. 03**

இந்த வினா மனித வள முகாமைத்துவம் (HRM) மற்றும் மாற்ற முகாமைத்துவத்தின் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. வினா **(a), (b), (c)** என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 10 புள்ளிகளை உள்ளடக்கியிருந்தது. பொதுவாக, பகுதி **(a)** இற்கான விடைகள் வெற்றிகரமான மட்டத்தில் அமைந்திருந்தன. ஆனால் **(b)** மற்றும் **(c)** இற்கான விடைகள் திருப்தியானதாக இருந்தன.

**(a)** மனித வளப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்குப் பின்பற்றக்கூடிய இரண்டு தந்திரோபாயங்களை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் தமது விடைகளில் கூடிய கவனம் செலுத்தி எழுதியிருந்தனர். ஆயினும் சில பரீட்சார்த்திகள் HR பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கான தந்திரோபாயங்களுக்குப் பதிலாக HR மிகைக்கான தந்திரோபாயங்களை எழுதியிருந்தனர்.

**(b)** கோவிட் 19 நோய்ப் பரவல் நிலைமையின்போது, நிறுவன நோக்கங்களை அடைந்து கொள்வதில் மனித வள முகாமைத்துவ (HRM) தொழிற்பாடுகள் எவ்வாறு உதவுகின்றன என விபரிக்குமாறு கேட்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளால் மாத்திரமே இந்தப் பகுதிக்கு முழுமையான புள்ளிகளைப் பெற முடிந்தது. ஏனையோரால் அவர்கள் குறிப்பிட்டதை விபரிக்க முடியவில்லை. சில பரீட்சார்த்திகள் மனித வள முகாமைத்துவ தொழிற்பாடுகளை கோவிட் 19 நோய்ப் பரவல் நிலைமையுடன் தொடர்புபடுத்தாது விபரித்திருந்தனர். அத்துடன், வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது விடைகள் அளிக்கப் பட்டிருந்ததையும் தேவையற்ற விபரிப்புகள் வழங்கப்பட்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. நடப்பு நிலைமை பற்றிய போதிய அறிவு காணப்படாததும் அவதானிக்கப்பட்டது.

**(c)** ஒரு நிறுவனம் மாற்றத்திற்கான தடைகளைச் சமாளிக்கக்கூடிய இரண்டு வழிவகைகள் பற்றி பரீட்சார்த்திகளிடம் கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கான முழுப் புள்ளிகளையும் பெற இது ஒரு இலகுவான வினாவாக அமைந்திருந்தாலும் பெரும்பாலான பரீட்சார்த்திகள் துல்லியமான விடைகளை வழங்கத் தவறியிருந்தனர். முழுமையான பாடத்திட்டத்தை படிக்காமலிருந்ததும் இத்தகைய மோசமான செயலாற்றுகைக்கு வழிகோலியிருந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 04

இந்த வினா நிறுவனமொன்றின் தந்திரோபாயங்களுடன் தொடர்புபட்டது. இந்த வினாவின் கீழ் **(a), (b), (c)** என மூன்று பகுதிகள் காணப்பட்டன.

**(a)** நிறுவனங்களில் காணப்படும் மூன்று வெவ்வேறு வகைத் தந்திரோபாயங்கள் குறிப்பிடப்பட வேண்டும். பெரும்பாலானவர்கள் சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். பாடத்தில் உள்ள இந்தப் பகுதியை பரீட்சார்த்திகள் படிக்கவில்லை என்பதை அவர்களது விடைகள் தெளிவாகப் புலப்படுத்தியிருந்தன.

**(b)** கிரய தலைமைத்துவம் மற்றும் பேதப்படுத்தல் ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே சரியான விடை அளித்திருந்தனர். அதிகளவானவர்கள் வினாவைச் சரியாக விளங்கிக் கொள்ளாது சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் கிரயத் தலைமைத்துவத்திற்காக தவறான விடைகளைக் குறிப்பிட்டிருந்தனர். வினாவின் இப்பகுதிக்கு மிகக் குறைந்தளவான புள்ளிகளே பரீட்சார்த்திகளால் பெறப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

**(c)** கட்டுப்படுத்தலின் இரண்டு வரையறைகளை விபரிக்க எதிர்பார்க்கப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகளே வினாவைச் சரியாக விளங்கிக் கொண்டதன் பின்னர் துல்லியமான விடைகளை அளித்திருந்தனர். ஆனால், பலர் இந்தப் பகுதிக்கு விடையளிக்காது விட்டிருந்தனர் அல்லது தவறான விடைகளை வழங்கியிருந்தனர். கட்டுப்படுத்தல் பற்றிய எந்தவித யோசனையையும் கொண்டிராத ஏராளமான பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியான மட்டத்தில் காணப்படவில்லை.**

### வினா இல. 05

இந்த வினா தொழிற்பாட்டு முகாமை மற்றும் நிறுவனத்திற்கான அதன் தாக்கம் என்பன பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சிக்க அமைக்கப்பட்டிருந்தது. இந்த வினாவின் கீழ், மூன்று பகுதிகள் காணப்பட்டன. **பகுதி (a)** இல் போட்டரின் பெறுமதிச் சங்கிலியில் உள்ள இரண்டு துணை

நடவடிக்கை களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் துல்லியமான விடைகளை அளித்திருந்தனர்.

**பகுதி (b)** இல் வணிக நிறுவனமொன்றின் வெற்றிக்கு தொழிற்பாட்டு முகாமைத்துவத்தின் இரண்டு வகிபாகங்களை விபரித்தல் வேண்டும். பல பரீட்சார்த்திகள் சரியான விடயங்களை கண்டுகொள்ளாது, சம்பந்தமற்ற விபரங்களை எழுதியிருந்தனர்.

**பகுதி (c)** இன் கீழ் இரண்டு பிரதான உற்பத்தி முறைகள் விபரிக்கப்பட வேண்டும். ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் மாத்திரமே துல்லியமான விடைகளை வழங்கியிருந்தனர். பல பரீட்சார்த்திகள் ''நேர் உற்பத்தி'', ''நேரில் உற்பத்தி'' என்றவாறு தவறான விடைகளை அளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

### வினா இல. 06

இந்த வினா கோவிட் 19 நோய்ப் பரவல் நிலைமையின் கீழ், சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் மற்றும் அதன் நடைமுறைப்படுத்தல்கள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. இதன் உப வினாக்கள், விளம்பரப்படுத்தலின் நெறிமுறையற்ற செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தலில் நெறிமுறை ஏன் முக்கியமானது என்பதற்கான காரணங்கள் என்பவை பற்றிய அறிவைப் பரீட்சிக்க வடிவமைக்கப்பட்டிருந்தன. **பகுதி (c)** இல், கோவிட் 19 நோய்ப் பரவல் காரணமாக நிறுவனமொன்றின் சந்தைப்படுத்தல் தொழிற்பாட்டிற்கு ஏற்படும் தாக்கங்கள் பற்றி பரீட்சார்த்திகளால் விபரிக்கப்பட வேண்டும். பல பரீட்சார்த்திகள் **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** இற்கு ஒரே விடையை எழுதியிருந்தனர். இது இந்த இரண்டு உப வினாக்கள் பற்றியும் போதிய அறிவைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கவில்லை என்பதையே காட்டுகிறது. தற்போதைய கோவிட் 19 நிலைமையில் சந்தைப்படுத்தலுக்காக நிகழ்நிலை (ஒன்லைன்) முறைமைகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதைப் பலர் மறந்திருந்தனர். பரீட்சார்த்திகள் இந்த வினாவுக்கு இலகுவாக முழுப் புள்ளிகளையும் பெற்றிருக்கலாம். ஆனால் பலரால் அவ்வாறு பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பகுதி C</u>

### வினா இல. 07

இது ஒரு விடய ஆய்வு வினாவாகும். தரப்பட்ட விவரணத்திற்கு எவ்வாறு கோட்பாட்டு ரீதியான காரணிகளைப் பிரயோகிக்கலாம் என்பதைப் பரீட்சிப்பதற்காக இவ்வினா அமைக்கப்பட்டிருந்தது. இவ்வினா **(a), (b), (c), (d)** மற்றும் **(e)** என 5 பகுதிகளைக் கொண்டது.

**(a)** நிறுவனத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியின்** தலைமைத் துவத்தினது வகிபாகம் ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு காரணங்களை விபரிக்குமாறு கேட்கப்பட்டது. தலைமைத்துவத்தின் வகிபாகத்தை விபரிக்கும்போது, பெரும்பாலான பரீட்சார்த்தி களால் தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் பற்றி கவனம் செலுத்தப்படவில்லை இது அவர்களால் விடப்பட்டிருந்த தவறாக இருந்தது. தலைமைத்துவத்திற்கான பண்புகள் அல்லது வேறு ஏதாவது விபரங்கள் குறிப்பிடப்பட்டதற்கு எவ்வித புள்ளிகளும் வழங்கப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் நான்கு காரணங்களை நிரற்படுத்தியிருந்த போதிலும், அவற்றை தரப்பட்ட விவரணத்திற்குப் பிரயோகித்து விபரமாக விபரிப்பதற்குத் தவறியிருந்தனர். இதனால், விபரிப்பதற்காக ஒதுக்கப்பட்ட புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

**(b)** கோவிட் 19 நோய்ப் பரவல் காலத்தில் **வரையறுக்கப்பட்ட GAG கம்பனி** ஊழியர்கள் ஊக்கப்படுத்தப்படுவதன் மூன்று முக்கியத்துவங்களை விபரிக்குமாறு இந்தப் பகுதியில் கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் திருப்திகரமான விடைகளை எழுதி, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஊழியர்களின் ஊக்கப்படுத்தலின் முக்கியத்துவத்தை எழுதியிருந்தனர் ஆயினும், அவற்றை விபரித்திருக்கவில்லை. இதனால் இந்தப் பகுதிக்கான முழுமையான புள்ளிகளை அவர்களால் பெற முடியவில்லை.

**(c)** இந்த நோய்ப் பரவல் காலப்பகுதியில் "Nectarzz" பொருளுக்கு **வரையறுக்கப்பட்ட GAG கம்பனியால்** பயன்படுத்தப்பட வேண்டிய நான்கு ஊக்குவிப்பு முறைகளைக் குறிப்பிடுமாறு இந்தப் பகுதியில் கேட்கப்பட்டிருந்தது. தரப்பட்ட விடைகள் புள்ளிகளைப் பெற போதுமானதாக இருந்த போதிலும், பரீட்சார்த்திகள் இந்த நோய்ப் பரவல் சூழ்நிலையில் சமூக இடைவெளியைப் பேணி, நிகழ்நிலை முறைமைகளைப் பயன்படுத்தத்தக்கவாறான ஊக்குவிப்பு முறைகளை கோடிட்டுக் காட்டியிருப்பின் அது சிறந்ததாக அமைந்திருக்கும். இந்தப் பகுதிக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

**(d)** **வரையறுக்கப்பட்ட GAG கம்பனிக்கு** மனித வள முகாமைத்துவத்தின் ஒரு தொழிற்பாடான ஊழியர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்தின் நான்கு நன்மைகளை குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. இந்தப் பகுதிக்கு புள்ளிகளைப் பெறுவது இலகுவானதாகக் காணப்பட்டதால் பெரும்பாலானவர்கள் சரியான விடைகளை அளித்து இதற்கு ஒதுக்கப்பட்டிருந்த முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(e)** இந்த இறுதிப் பகுதியில், **வரையறுக்கப்பட்ட GAG கம்பனி**க்கான தந்திரோபாயத் திட்டமிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று காரணங்களை குறிப்பிட எதிர்பார்க்கப்பட்டது. தந்திரோபாயத் திட்டமிடல் என்பதால் கருதப்படுவது யாது என்பது பற்றி விளங்கிக் கொள்ளுதல் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிடுதல் என்பன புள்ளிகளைப் பெறப் போதுமான தாகும். சில பரீட்சார்த்திகளால் இதற்குச் சரியான விடை அளிக்க முடிந்திருந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் அவர்களது முயற்சியில் தோல்வியடைந்திருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை சராசரி மட்டத்தில் காணப்பட்டது.**

## <u>பரீட்சார்த்திகளின் புரிதல் மற்றும் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:

**(1)** பாடத்திட்டத்தை / பாடப்புத்தகத்தை நன்றாகக் கற்கவும்.

**(2)** வினாத்தாளைப் பெற்றதும் அதிலுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும் (இந்த நோக்கத்திற்காக மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது).

**(3)** பரீட்சார்த்திகள் வினாவைப் பல தடவைகள் வாசித்து அதில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். நேரடியான விடையொன்று எதிர்பார்க்கப்படும் போது தேவையற்ற விவரிப்புகளையும் விபரங்களையும் எழுதுவதைத் தவிர்க்கவும்.

**(4)** விடைகள் ஒரே மொழியில் மாத்திரம் எழுதப்பட வேண்டும். அது நீங்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும்போது குறிப்பிட்ட மொழியாக இருப்பதுடன் ஒவ்வொரு வினாவுக்குமான விடைகள் ஒரு புதிய பக்கத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(5) பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

(6) விடைப்புத்தகத்தைக் கையளிப்பதற்கு முன்னர், சகல வினா இலக்கங்களும் உங்களுடைய சுட்டெண்ணும் சரியாக எழுதப்பட்டிருக்கிறதா என்பதை இருமுறை பரீட்சித்துக் கொள்ளவும்.

(7) ''செயல் வினைச்சொல் செவ்வை நிரல்'' வினாத்தாளின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் அந்த நிரலில் தரப்பட்ட வரைவிலக்கணங் களின் அடிப்படையில் விடையளித்தல் வேண்டும்.

(8) கையெழுத்து தெளிவாக இருப்பதையும் விடைகளுக்கான வினா இலக்கங்கள் சரியாக எழுதப்பட்டுள்ளன என்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

(9) சுய கற்றல் புத்தகம், கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பது பயனுடையதாகும்.

(10) உங்களது அறிவை மேம்படுத்திக்கொள்ளும் பொருட்டு கடந்தகால வினாத்தாள்களுக்கு விடையெழுதிப் பயிற்சி பெறுவது சிறந்தது.

(11) பரீட்சையில் சித்தியடையும் உறுதியான நோக்கத்துடனும் நல்ல தயார்படுத்தலுடனும் பரீட்சைக்கு முகங்கொடுக்கவும்.

- * * *-